26.03.2026

O.S.No.303/2014

வா.சா.1.திரு.தெய்வநாதன், த.பெ.திரு.தனிக்கோடிதேவர்.

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**1,2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் காவல் துறையில் பணிபுரிந்து VRS பெற்றுள்ளேன். நான் கிரையம் வாங்கிய சொத்தின் ஆவணமான வா.சா.ஆ.1 ஆவணத்தின் அசல் ஆவணம் என்னிடம் தான் உள்ளது என்றால் சரிதான். வங்கியில் உள்ளது. நான் மேற்படி இடத்தை பாண்டிசெல்வம் என்பவரிடம் வாங்கினேன் என்றால் ஆமாம். நான் வாங்கிய சொத்தின் அளவு கிழமேல் அடி, வடபுறம் 22, தென்புறம் 22, தென்வடல் அடி மேல்புறம் 44, கீழ்புறம் 44 அடி என்றால் சரிதான். தற்போது செட்டில்மெண்ட் பிரகாரம் கிழமேல் அடி 24, தென்வடல் அடி 44 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ. 1 கிரைய ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செட்டில்மெண்ட் ஆவணத்தை இந்த தாக்கல் செய்துள்ளேனா என்றால் நகல் கொடுத்துள்ளேன்.

2. நான் கிரையம் வாங்கிய சமயம் 16.07.1987 தேதிய எனக்கு விற்றவர் கிரையம் வாங்கிய கிரைய ஆவணம் மற்றும் செட்டில்மெண்ட் ஆவணம் என் வசம் ஒப்படைக்கப்பட்டதாக வா.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் என்னுடைய கிரையப் பத்திரத்தில் குறிப்பிட்டுள்ளப்படி 22 x 44 அடி அளவிற்கு கட்டிட அனுமதி பெற்று கட்டுமானம் கட்டியுள்ளேன் என்றால் ஆமாம். எனக்கு விற்பனை செய்த பாண்டிசெல்வம் என்பவர் பாண்டியம்மாளிடம் கிரையம் வாங்கிய 16.07.1987 தேதிய கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல் என்னிடம்

காண்பிக்கப்படுவதுதான் என்றால் சரிதான். 16.07.1987 தேதிய கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் எனக்கு விற்பனை செய்த பாண்டிசெல்வம் என்பவர் "தற்போது அளந்துக் கொண்ட அளவுபடி கிழமேல் அடி22, தென்வடல் அடி 44க்கு 968 சதுரடி வீட்டடி காலி மனையிடம் பூராவும் தங்களுக்கு கிரையம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது" என்றால் சரிதான். எங்கள் வீட்டிற்கு மேற்காக பிரதிவாதிகள் இடம் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் மேற்கே ராக்கி பிச்சான் அம்பலம் வீடு என்று காண்பிக்கப்பட்டுள்ளதா என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் மேற்கே பாதை என காண்பிக்கப்பட்டுள்ளதா என்றால் ஆவணத்தில் இல்லை ஆனால் ஸ்தலத்தில் உள்ளது.

4. நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் மேற்கே Rakku Pichan Ambalam house (now Defendant's tiled property) என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். ஆனால் வழக்குரையில் கிழமேல் 24 அடி, தென்வடல் 44 அடி என்று கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். பாண்டிசெல்வம் என்ன விஸ்தீரணம் உள்ள சொத்தை பி.வா.சா.ஆ.1 ஆவணம் மூலம் அந்த விஸ்தீரணமுள்ள சொத்தைதான் நான் கிரையம் வாங்க முடியும் என்றால் எனது கிரைய ஆவணத்தில் செட்டில்மெண்ட் படி கிழமேல் 24 அடி என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

5. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் செட்டில்மெண்ட் பிரகாரம் கிழமேல் 24 அடி என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. நான் செட்டில்மெண்ட் ஆவணம் என்று குறிப்பிடுவது எனக்கு கிரையம் கொடுத்த பாண்டிசெல்வம் என்பவர் கிரையம் பெற்ற பாண்டியம்மாள்

என்பவருக்கு அவரது கணவர் மற்றும் அவரது மூன்று குழந்தைகள் எழுதிக் கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணம் என்றால் சரிதான். ராமு அம்பலம் தன் மனைவிக்கு பாண்டியம்மாளுக்கு கிழமேல் 24 அடி , தென்வடல் 44 அடிக்கு 26.03.1980ம் தேதியில் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக் கொடுத்திருந்தாலும் கூட எனக்கு கிரையம் கொடுத்த பாண்டிசெல்வம் கிரையம் வாங்கிய பி.வா.சா.ஆ.1 ஆவணத்தின்படி கிழமேல் 22 அடியைதான் எனக்கு கிரையம் கொடுக்க முடியும் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 ஆவணத்தின்படி கிழமேல் 18 1/2 அடிக்கு கட்டுமானம் கட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். ராக்கி பிச்சான் அம்பலம் என்பவருக்கு எனது சொத்திற்கு மேற்கே அவரது வீடும், தெற்கே படப்படியும் உள்ளது என்றால் சரிதான். ராக்கி பிச்சான் அம்பலம் என்பவருக்கு எனது சொத்திற்கு மேற்கே அவரது வீடும், தெற்கே படப்படியும் உள்ளது என்று வா.சா.ஆ.1 ஆவணத்திலும், பி.வா.சா.ஆ.1 ஆவணத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் தெற்கு பகுதியில் உள்ள படப்படியும் நான்தான் வாங்கியுள்ளேன்.

6. நான் கிழமேல் 24 அடிக்கு உரிமை கோரமுடியாது என்றாலும், வா.சா.ஆ.1, பி.வா.சா.ஆ.1 ஆவணத்தின்படி கிழமேல் 22 அடிக்கு மட்டுமே உரிமை கோரமுடியும் என்றாலும் சரியல்ல. 7 செண்ட் இடத்தை போஸ் என்ற மந்தையன் மற்றும் நான்கு நபர்களிடம் இருந்து கிரையம் வாங்கி உள்ளேன். 1, 2 பிரதிவாதிகள் 2012ம் ஆண்டு கிரையம் வாங்கினார்கள் என்றால் சரிதான். 2012 ஆம் ஆண்டு முதல் இன்றைய தேதிவரை 1, 2 பிரதிவாதிகள் கட்டுமானம் கட்ட முயற்சித்தப்போது நான் பிரச்சனை செய்து வருகிறேன் என்றால் நான் பிரச்சனை செய்யவில்லை. மந்தையன், ருக்குமணி பிரச்சனை செய்கிறார்கள். நான் 1,2 பிரதிவாதிகளிடம்

பிரச்சனை செய்யவில்லை என்றால் சரிதான். 3 அடி பாதையை பொறுத்து மட்டுமே உண்டு என்று சொல்லுகிறேன் நான் சண்டை எதுவும் போடவில்லை. இன்றைய தேதிவரை 1, 2 பிரதிவாதிகள் கட்டுமானம் கட்டவில்லை என்றால் சரிதான். 1, 2 பிரதிவாதிகள் கட்டுமானம் கட்டினால் எனக்கு ஆட்சேபனை இல்லையா என்றால் பாதையில் இடஞ்சல் செய்யாமல் அவர்கள் கட்டுமானம் கட்டிக் கொள்ளலாம்.

7. எனது பத்திரத்தில் மேற்கு மாலாக ராக்கி பிச்சான் அம்பலம் வீடு என குறிப்பிடப்பட்டுள்ளதால் கிழமேல் 22 அடியை தாண்டி எனக்கு எந்த உரிமை இல்லை என்றாலும், 1, 2 பிரதிவாதிகள் கட்டுமானம் கட்டுவதற்கு உரிமை உள்ளது என்றாலும் சரியல்ல. மந்தையன், ருக்குமணி, சத்தியமூர்த்தி, உமாமகேஸ்வரி, அமுதா, கார்த்திக் பாபு, தியாகராஜன் ஆகியோர்களை 3 முதல் 9 பிரதிவாதிகளாக சேர்க்க கேட்டு நான் தான் மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆமாம். பொது பாதை என சொல்லி 3 முதல் 9 பிரதிவாதிகளுக்கு இடையே O.S. 209/2006 என்ற எண்ணில் வழக்கு நடைபெற்று அவர்களுக்குள் சமாதானமாக முடிந்தது என்றால் ஆமாம். அதில் மந்தையன், ருக்குமணி ஆகியோர்களை தவிர இதர நபர்கள் பாதை உரிமை கொண்டாடி எதிர்கோருரிமை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

8. O.S. 209/2006 என்ற வழக்கில் 1,2 பிரதிவாதிகள் தரப்பினர்கள் அல்ல என்றால் சரிதான். 04.09.2014ம் தேதி பாதையை புழங்கும்போது 1, 2பிரதிவாதிகள் தகராறு செய்கிறார்கள் என்று இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் பாதையில் கல் போட்டு கட்டுமானம் ஆரம்பித்ததால் இந்த வழக்கு தாக்கல் செய்தேன். 04.09.2014 ம் தேதி எத்தனை மணிக்கு தகராறு செய்தார்கள் என்று குறிப்பிட்டு

சொல்லப்படவில்லை என்றால் சரிதான். 04.09.2014 ம் தேதி எந்த ஒரு சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் பொய்யாக வழக்கு தாக்கல் செய்வதற்காக அவ்வாறு குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேன். காவல் நிலையத்தில் கொடுத்த புகார் இந்த வழக்கில் குறியீடு செய்யப்படவில்லை என்றால் சரிதான். நான் போலீஸ்க்காரர் என்பதால் எனது செல்வாக்கை பயன்படுத்தி 1,2 பிரதிவாதிகள் கட்டுமானம் கட்டுவதை தடுத்து வருகிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் பாதை பொது பாதை அல்ல என்றாலும், 1, 2 பிரதிவாதிகளுக்கு கிரைய பாத்தியம் என்றாலும் சரியல்ல.

(3,4,8 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேலூர்.